# பிள்ளைகளின் பாலியல் சம்பந்தமான கேள்விகளுக்கு விடை கூறல்

## நாங்கள் ஏன் பிள்ளைகளின் பாலியல் சம்பந்தமான கேள்விகளுக்கு எப்பவும் விடை கூற வேண்டும்

- சிறார்கள் பாலியல் பற்றி அறிவதற்கு ஆர்வமாக இருப்பார்கள்.
- சிறார்கள் தங்களைச் சுற்றி நடக்கும் பல புரியாத குழப்பமான விடயங்களை அவதானித்துக் கொண்டிருப்பார்கள்.
- சிறார்களின் கேள்விகளை எப்போதும் வரவேற்க வேண்டும். இதன் மூலம் அவர்கள், தங்களுக்கு ஏதாவது புரியாமல் இருந்தால் வேறு மனிதரையோ அல்லது சாதனங்களையோ நாடாமல் உங்களிடம் வரலாம் என்று உணர்வார்கள். வேற்று இடங்களில் இருந்து கிடைக்கும் விடைகள் பிழையானதாகவோ அல்லது அக்கறையில்லாமலோ கொடுக்கப்பட்டதாக இருக்கலாம்.
- பெற்றோர்-பிள்ளைகளுக்கிடையில் இதன் மூலம் ஒரு ஆரோக்கியமான உறவு முறையை உருவாக்கலாம்.
- இது குடும்பம் பற்றியும் எங்கள் கலாச்சாரத்தின் மேன்மை பற்றியும் பிள்ளைகளுடன் கலந்துரையாடுவதற்கு ஒரு ஏற்ற சந்தர்ப்பமாக இருக்கும்.
- அவர்களின் கேள்விகளுக்கு விடைகளை உண்மையாக நல்ல விதமாக கூறும் பொழுது அவர்களுக்கு பாலியல் என்பது ஓர் அற்புதமான விடயம், நாங்கள் மிகவும் மதிப்பிற்குரியவர்கள் என்ற எண்ணத்தை மீண்டும் வலியுறுத்துவதாக அமையும்.

## எப்போது நாங்கள் சிறார்களுக்கு பாலியல் சம்பந்தமான கேள்விகளுக்கு விடை கூற வேண்டும்

- அவர்கள் எப்போது கேள்வி கேட்கிறார்களோ அப்போது. எங்களுக்கு அக் கேள்விக்குரிய விடை தெரியாவிட்டால், **"இது ஒரு நல்ல கேள்வி, நாங்கள் இது பற்றி பின்னர் கதைப்போம்"** என்று கூறலாம். பின்னர் கதைப்போம் என்று கூறியதை ஞாபகத்தில் வைத்து அதை செயற்படுத்துங்கள்.
- எங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் வேளை எல்லாம் நாங்கள் அவர்களுடன் கதைக்கலாம். உதாரணமாக தொலைக்காட்சி நிகழ்ச்சி பார்க்கும் பொழுது, கர்ப்பவதி ஒருவரைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்படும் பொழுதோ அல்லது விலங்குகள் குட்டி ஈனும் பொழுது கதைக்கத் தொடங்கலாம்.
- அவர்கள் கேள்வி கேட்காவிடினும், அவர்களை கட்டாயப்படுத்தாத முறையில் நீங்கள் கேட்கலாம், **"நீ இது பற்றி என்ன நினைக்கிறாய்?" "இது பற்றி என்ன தெரியும்?"** என்று. நீங்கள் இப்படிக் கேள்விகள் கேட்பதால் அவர்களுக்குத் தெரியவரும் அவர்கள் விரும்பும் நேரம் நீங்கள் இது பற்றி கதைப்பீர்கள் என்று.
- இருவருக்கும் சௌகரியமான நேரத்திலும், இடத்திலும் இதைப்பற்றிக் கதைக்கலாம். உதாரணத்திற்கு படுக்கப்போகும் நேரமோ அல்லது சேர்ந்து நடக்கும் பொழுதாகவோ இருக்கலாம்.

## கேள்விகளுக்கு விடை கூறும் பொழுது நாங்கள் என்ன கூற வேண்டும்

- விடைகளைச் சரியாக, உண்மையாக, சுருக்கமாக, இலகுவாக விளங்கக் கூடிய விதத்தில் கொடுங்கள்.
- விடை கொடுக்கும் பொழுது அவர்களின் வயதிற்கு விளங்கக் கூடிய சொற்களையும், கருத்துக்களையும் கூறுங்கள்.
- உங்கள் குடும்பம், கலாச்சாரம், சமயம் போன்றவற்றில் முக்கியமானது பெறுமதியானது என்று நீங்கள் கருதும் விடயங்கள் பற்றிச் சொல்லிக் கொடுங்கள்.
- அவர்களின் வயதிற்குப் பொருந்தக் கூடிய சரியான பழக்கவழக்கங்கள் எது என்று சொல்லிக் கொடுங்கள்.
- உயர்ந்த எண்ணமுடையவராக இருங்கள். உங்கள் பிள்ளைக்குக் கூறுங்கள் அவர்கள் கேள்வியுடன் உங்களிடம் வந்ததையிட்டு உங்களுக்குச் சந்தோசம் என்று.
- நீண்ட அறிவுரைகளையும், கோவமான உரையாடல்களையும் தவிருங்கள்.
- உங்களின் சொந்த பாலியலுறவு பற்றிய கேள்விகளுக்கு விடையளிக்கும் பொழுது ஒருவரின் தனிப்பட்ட விடயம் அவர்களுக்கு மட்டும் உரிய இரகசியமான விடயம் என்று புரிய வைக்க வேண்டும். "நானும் அப்பாவும் வாய்வழி உடலுறவு கொள்வது பற்றி கேள்வி கேட்டாய், சில விடயங்கள் எங்கள் இருவருக்கும் உரிய தனிப்பட்ட விடயம், அதில் இதுவும் ஒன்று, இதை நாங்கள் வேறு ஒருவருடனும் பகிர்ந்து கொள்ள மாட்டோம். உனக்கும் சில தனிப்பட்ட விடயங்கள் இருக்கலாம், இவ் விடயங்களை நீயும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்ப மாட்டாய்" என்று கூறலாம்.

## எப்படி கேள்விகளுக்கு விடை கூற வேண்டும்

- பிள்ளைகளுக்கு ஏற்கனவே என்ன தெரியும், என்ன யோசிக்கிறார்கள், என்ன உணர்கிறார்கள் என்று கேளுங்கள்.
- அவர்களுக்கு எப்படி விடை கூறலாம் என்று நேரம் எடுத்து யோசியுங்கள். உங்கள் பிள்ளைக்கு நீங்கள் விடை கூறுவது தான் முக்கியம் அது சில நிமிடங்களின் பின்னராகவோ அல்லது சில நாட்களாகளின் பின்னராகவோ இருக்கலாம். கேள்வி கடினமானதாக இருந்தால் அதற்கு எவ்வாறு பதில் அளிக்கலாம் என்பது பற்றி வேறு யாருடனாவது கலந்துரையாடலாம்.
- நீங்கள் அசௌகரியமாகவோ அல்லது சங்கடமாகவோ உணர்ந்தால் அதை ஒப்புக் கொள்ளுங்கள்.
- உங்களுக்கு விடை தெரியாவிட்டால் அதை ஒப்புக் கொள்ளுங்கள்.
- உங்கள் பிள்ளையின் கேள்விக்கு உரிய விடயம் அடங்கிய புத்தகம் ஒன்றைக் கண்டு பிடித்து, அப் புத்தகத்தை உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து வாசியுங்கள்.
- சிறார்களின் தன்நம்பிக்கையை கூட்டக்கூடிய விதத்தில் விடை கூறுங்கள்.

பெற்றோர்கள், பாலியல் பற்றி சிறர்களுடன் கதைக்கும் வேளையில் இந்த நாலு குறிப்புக்களையும் ஞாபகத்தில் வைத்திப்பது அவர்களுக்கு உதவியாக இருக்கும்.

**பிள்ளைகளுக்கு கற்பிக்கப்பட வேண்டியது:**
- உண்மைகள்
- விழுமியங்கள்
- பொறுப்புணர்வு
- சுயமதிப்பு / சுயஅபிமானம்

TORONTO Public Health

மேலதிகத் தகவல்களுக்குத் தொடர்பு கொள்ள கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:
எய்ட்ஸ்-பாலியல் உறவு தொலைபேசித் தொடர்பு 1-800-668-2437 or (416) 392- 2437
**Answering Children's Questions About Sexuality (Tamil)**
PH9902-0004